தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

11.03.2013 A.M

## கறவை மாடு வளர்ப்பை கைவிடும் விவசாயிகள்

கால்நடை தீவனம் விலை உயர்வு, பசுந் தீவனப் பற்றாக்குறை ஆகியவற்றால் மாவட்டத்தில் பால் உற்பத்தி குறைந்து வருகிறது. பால் உற்பத்தி மற்றும் கால்நடை பராமரிப்பு செலவு அதிகரித்து வருவதால் கறவை மாடு வளர்ப்பு தொழிலை கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

மாவட்டத்தில் விவசாய வருமானத்தை அதிகரிக்கும் வகையிலும், விவசாயம் சார்ந்த சிறு தொழிலாகவும் கறவை மாடு வளர்ப்பில் ஏராளமான விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பலர் வங்கி கடனுதவி பெற்று கறவை மாடு வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாவட்டத்துக்கு உள்பட்ட பகுதிகளில் இருந்து, தேனி ஆவின் நிறுவனம் மூலம் தினமும் 1.25 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

இது தவிர மாவட்டத்தில் 11 இடங்களில் செயல்பட்டு வரும் தனியார் பால் குளிரூட்டும் நிறுவனங்கள், பண்ணையாளர்கள், சில்லரை விற்பனையாளர்கள் மூலம் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

தேனி மாவட்டத்தில் இருந்து குமுளி, கம்பம்மெட்டு, போடிமெட்டு வழியாக கேரளத்துக்கு தினமும் 3 லட்சம் லிட்டருக்கும் மேல் பால் விற்னைக்கு அனுப்பப்படுகிறது.

பால் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டு நல்ல வருமானத்தை ஈட்டி வந்த விவசாயிகள், கடந்த சில ஆண்டுகளாக பசுந்தீவனப் பற்றாக்குறை, தீவனம் விலை உயர்வு ஆகியவற்றால் நஷ்டத்தை சந்தித்து வருவதாகக் கூறினர்.

மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால் பசுந்தீவனம் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. நெல் வயல்களில் அறுவடை நேரத்தில் பெய்யும் மழை, வேலையாட்கள் பற்றாக் குறை ஆகியவற்றால் பெரும்பாலான வயல்களில் வைக்கோல் வீணாகிறது.

கேரளத்துக்கு கொண்டு செல்ல வைக்கோல் அதிக அளவு கொள்முதல் செய்யப்படுவதால், உள்ளூர் விற்பனை விலை உயர்ந்துள்ளது. உற்பத்தி குறைவால் ஏற்பட்டுள்ள மூலப் பொருள் பற்றாக்குறை, மின் தடை, பெட்ரோல் விலை உயர்வு ஆகியவற்றால் கலப்பு தீவனம் விலை கடந்த ஆண்டை விட தற்போது 30 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

தற்போது, கிலோ ஒன்றுக்கு கம்பு மாவு ரூ.18, சோளம் மாவு ரூ.17, மக்காச்சோளம் மாவு ரூ.18, குச்சித் தீவனம் ரூ.18, உளுத்தம் குருணை ரூ.12, பருத்தி விதை புண்ணாக்கு ரூ.20, கடலை புண்ணாக்கு ரூ.44, பெரிய பருத்தி விதை ரூ.20-க்கு விற்பனை செய்யப்படுகிறது. சின்னப் பருத்தி விதை வரத்து இல்லாததால் தட்டுப்பாடு நிலவுகிறது.

பசுந்தீவன பற்றாக்குறை, வைக்கோல் மற்றும் கலப்பு தீவன விலை உயர்வு ஆகிவற்றால் கறவை மாடுகளுக்கு தேவையான அளவு சமச்சீர் தீவனம் அளிக்காத நிலையில், மாடுகளின் பால் உற்பத்தி திறன் குறைந்து வருகிறது. அதிக விலை கொடுத்து வாங்கிய கலப்பின கறவை மாடுகள், ஆரோக்கியம் குன்றி காணப்படுவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

தீவன செலவுகளுக்காக பண்ணையாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் வாங்கிய முன் பணத்தைக் கூட திரும்ப செலுத்த முடியாமல், பால் உற்பத்தி தொழிலில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதால், கறவை மாடு வளர்ப்பை கைவிடும் நிலையில் உள்ளதாக விவசாயிகள் மற்றும் கறவை மாடு வளர்ப்போர் கூறினர்.

பால் உற்பத்தி பாதிக்காமல் இருக்கவும், கறவை மாடு வளர்ப்போர் பயனடையும் வகையிலும் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கறவை மாடுகளுக்கு மானிய விலையில் கலப்பு தீவனங்கள் வழங்க வேண்டும். கலப்பு தீவன உற்பத்தி, தீவனப் புல் வளர்ப்பு ஆகியவை குறித்து பயிற்சி அளிக்க வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கை.

## வேளாண் பல்கலை.யில் செயல்படும் சிறு வனப் பொருட்களின் தேசிய திட்டம்

மத்திய அரசின் சிறுவனப் பொருட்களின் தேசிய திட்டம், கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசின் மலைவாழ் மக்கள் நலத் துறையின் கீழ் செயல்படும் மலைவாழ் மக்கள் கூட்டுறவு வளர்ச்சி சம்மேளனம் மூலமாக, சிறு வனப் பொருட்களின் தனி விவரம் மற்றும் பயிற்சிக் கோப்பு தயாரித்தல் என்ற திட்டம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் அளிக்கப்பட்டு ரூ. 25 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இரு பகுதிகளைக் கொண்டதாகும்.

முதல் பகுதியில் பீடி இலை, மூங்கில், இலுப்பை மலர் மற்றும் இலை, சால் இலை, விதை, அரக்கு, சிரோஞ்சி, காட்டுத் தேன் மற்றும் புளி ஆகியவற்றுக்கு முகப்புரை, தாவர விவரங்கள், பொருட்களின் நிலை, இந்தியாவில் உற்பத்தி நிலை, ஏற்றுமதி- இறக்குமதி விவரம், அரசு கொள்கைகள், பொருட்களின் கொள்முதல் நிலை ஆகியவை குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இரண்டாவது பகுதி, தேர்வு செய்யப்பட்ட சிறு வனப் பொருட்களின் நிலை, பயிற்சி முறை மற்றும் தொழில்நுட்பம் ஆகிய விவரங்களை அடிப்படையாகக் கொண்டது. பயிற்சிக் கோப்பு தயாரிக்கும் முன், களப்பணி, நோக்கங்கள், பயிற்சியின் தேவை மற்றும் நன்மைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பயிற்சியின் உட்கூறுகள் உறுதி செய்யப்படுகின்றன.

இந்தக் கோப்பானது பயிற்சித் திட்டம், செயல்முறை, பயிற்சியாளர்களின் எண்ணிக்கை, விரிவுரை கலந்த பயிற்சியின் வடிவமைப்பு மற்றும் களப்பணி, கருத்தாய்வு மற்றும் பகுப்பாய்வு மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கியது.

இந்தத் திட்டத்தின் பரிந்துரையின்படி, மத்திய அரசால் தேசிய அளவில் 11 சிறுவனப் பொருட்களுக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கப்பட உள்ளது.

வரும் 12-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு சிறு வனப் பொருட்களின் துணைப் பிரிவில், சிறு வனப் பொருட்களுக்கு தனியாகக் குழு உருவாவதற்கு ஏற்கனவே பரிந்துரை செய்யப்பட்டுள்ளது; சிறுவனப் பொருட்களை ஊக்குவிக்க ரூ. 40,000 கோடி நிதி அளிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### 600 கால்நடைகளுக்கு சிகிச்சை

திருவண்ணாமலை விக்னேஷ் பாலிடெக்னிக் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் நடைபெற்ற சிறப்பு கால்நடை சிகிச்சை முகாமில் 600 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

மேல்கச்சிராப்பட்டு மற்றும் கீழ்கச்சிராப்பட்டு கிராமங்களில் இம் முகாம்கள் அண்மையில் நடைபெற்றன. திருவண்ணாமலை கால்நடை பராமரிப்புத் துறை மருத்துவர் எம்.தீனதயாளன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

குடற்புழு நீக்கம், அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி, கோமாரி நோய்த் தடுப்பூசி, மலட்டுத் தன்மை நீக்குதல், ஆண்மை நீக்கம், சினைப் பரிசோதனை, கரு ஊசி போடுதல் உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. 200 மாடுகள், 400 ஆடுகள் என மொத்தம் 600 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

முகாம் ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் டி.சர்வேசன், ஜி.நதியா மற்றும் மாணவர்கள் செய்திருந்தனர்.

## வெண்பட்டு விழிப்புணர்வு முகாம்

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி அருகே கத்தரிப்பள்ளி கிராமத்தில் வெண்பட்டு விழிப்புணர்வு முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பட்டு வளர்ச்சித் துறை மூலம் நடைபெற்ற வெண்பட்டு விழிப்புணர்வு முகாமிற்கு உதவி ஆய்வாளர் சேகர் தலைமை வகித்தார். இந்த முகாமில் உதவி இயக்குநர் கதிர்வேலு பட்டு விவசாயிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார். மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி மாசிலாமணி வெண்பட்டு வளர்த்தலின் முக்கியத்துவம், பயன்பாடுகள் குறித்து பேசினார்.

மேலும், விவசாயிகளின் சந்தேங்களுக்கும் பதில் அளிக்கப்பட்டது. இந்த முகாமில் விருப்பசந்திரம், நந்தகொண்டப்பள்ளி, ஜேடுகொத்தூர் பகுதியைச் சேர்ந்த பட்டு விவசாயிகள் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை இளநிலை உதவியாளர் ராமசாமி செய்திருந்தார். இளநிலை ஆய்வாளர் பெரியசாமி நன்றி கூறினார்.

## துல்லிய பண்ணைய திட்டப் பயிற்சி முகாம்

கரூர் மாவட்டம், தாந்தோணி வட்டாரத்தில் விவசாயிகளுக்கு தோட்டக்கலைப் பயிர்களின் துல்லிய பண்ணையத் தொழில்நுட்பங்கள் குறித்த 2 நாள் பயிற்சி அண்மையில் வழங்கப்பட்டது.

தாந்தோணி வட்டாரத்தில் உள்ள மூக்கணாங்குறிச்சி கிராமத்தில் 20 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு துல்லிய பண்ணைய விவசாயிகள் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

முதல் நாள் மூக்கணாங்குறிச்சி கிராமத்தில் நடைபெற்ற பயிற்சியை கரூர் மாவட்டத் தோட்டக்கலை துணை இயக்குநர் வெ. சதாசிவம் தொடக்கி வைத்தார். தாந்தோணி வட்டாரத் தோட்டக்கலை உதவி இயக்குநர் லூ. சொர்ணமாணிக்கம் துல்லிய பண்ணைத் திட்டத்தின் நோக்கம், முக்கியத் தொழில்நுட்பங்கள் குறித்து பேசினார்.

தாந்தோணி வட்டார துணை தோட்டக்கலை அலுவலர் ப. ஜானகி, துல்லிய பண்ணையத் திட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள மானிய விவரங்கள், பதிவேடுகள் பராமரிக்க வேண்டிய முறை குறித்து விளக்கினார்.

நுண்ணீர் பாசன அமைப்பைப் பராமரிக்கும் முறை குறித்தும், நீரில் கரையும் ரசாயன உரங்களை, கரையும் உரப்பாசனம் மூலம் பயிர்களுக்கு அளிக்கும் முறை குறித்தும் ரமேஷ் விளக்கினார்.

வயல்களைப் பராமரிக்கும் முறை குறித்து தாந்தோணி வட்டார உதவி வேளாண் அலுவலர் கா. லெனின் எடுத்துக் கூறினார்.

2-ம் நாள் வயல்வெளி பயிற்சியாக ஏற்காடு வட்டாரத்திலுள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்துக்கு விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு சம்பந்தப்பட்ட துறை வல்லுநர்களால் தீர்வுகள் வழங்கப்பட்டன.

ஏற்காடு வட்டாரத்திலுள்ள முன்னோடி விவசாயிகளின் வயல்களில் ஏற்காடு வட்டார உதவி வேளாண் அலுவலர் திருப்பதி வயல்வெளிப் பயிற்சி அளித்தார்.

ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் இரா. பாலசுப்பிரமணியன், கு. கல்யாணசுந்தரம் ஆகியோர் செய்தனர்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 29.18 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 29.18 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 253 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 400 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

### கோழிப்பண்ணைகள் அமைக்க ரூ. 2.85 கோடி மானியம்

பெரம்பலூர் மாவட்டத்தில் கோழிப்பண்ணைகள் அமைக்க மானியமாக 138 பயனாளிகளுக்கு ரூ. 2 கோடியே 85 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டத்தில் உள்ள கீழப்புலியூர், புதூர் ஆகிய கிராமங்களில் தமிழக அரசின் கோழிப்பண்ணை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் கோழிப்பண்ணைகள் திறப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கோழிப்பண்ணைகளைத் திறந்துவைத்த ஆட்சியர் மேலும் பேசியது:

கோழிப்பண்ணை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், பெரம்பலூர் மாவட்டத்தில் கோழிப்பண்ணைகள் அமைக்க மானியமாக 138 பயனாளிகளுக்கு ரூ. 2 கோடியே 85 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு தமிழக அரசு ரூ. 2 லட்சத்து 6 ஆயிரமும், மத்திய அரசின் கோழி வளர்ச்சி நிதி ஆதாரத் தொகையிலிருந்து ரூ. 2 லட்சத்து 6 ஆயிரமும் மானியமாக வழங்கப்படுகிறது.

கோழிப்பண்ணைகள் அமைக்க இதுவரை 630 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட விருப்பம் தெரிவித்து, தேர்வு செய்யப்பட்ட நபரிடம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஒப்படைக்கப்பட்டு, கோழிப்பண்ணை அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ள 315 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

இதில் வங்கியாளர்களால் முன் அனுமதி ஆணை வழங்கப்பட்ட பயனாளிகள் கோழிப்பண்ணைகள் அமைத்து வருகின்றனர். தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, தமிழ்நாடு கால்நடை பல்கலைக் கழகத்தின் மூலம் கோழிப்பண்ணை அமைத்தல், தீவனம் வழங்குதல், நோய் அறிகுறிகள், அதைத் தடுக்கும் முறைகள் குறித்து 5 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் தமிழகத்திலேயே மாநிலத் திட்டக் குழுவின் கணக்கீடுகளின் அடிப்படையில், வேப்பூர் ஒன்றியம் கடைசி இடத்தில் உள்ளதாக தமிழக முதல்வர் குறிப்பிட்டார்.

வேப்பூர் ஒன்றியத்தை முன்னேற்றும் நடவடிக்கையாக கோழிப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அடுத்தாண்டிக்குள் முன்னேறிய வட்டாரங்களின் வரிசையில் சிறப்பிடம் பெற வேப்பூரில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கீழப்புலியூர் இந்தியன் வங்கி கிளை மூலம் 12 நபர்களுக்கு கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

இதில், கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் (பொ) க. தங்கராசு, வேப்பூர் ஒன்றியக் குழுத் தலைவர் ந. கிருஷ்ணகுமார், ஒன்றியக் குழு உறுப்பினர் பத்ராசெல்வம்,

ஊராட்சித் தலைவர் செல்வராஜ், கால்நடை மருத்துவர்கள் திருநாவுக்கரசு, ஜவகர், மூக்கன், ராமன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பாபநாசம், மணிமுத்தாறு நீர்மட்டம் மேலும் உயர்வு

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த மழையால் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் மேலும் உயர்ந்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் சில நாள்களாக பரவலாக மழை பெய்தது. அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த பலத்த மழையால் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு, கடனாநதி, ராமநதி அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்தது.

ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணை நீர்மட்டம் 3.20 அடி உயர்ந்து 73.50 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 2,032.38 கனஅடி நீர்வரத்து இருந்தது.

சேர்வலாறு அணை நீர்மட்டம் 2.90 அடி உயர்ந்து 86.61 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 89.90 அடியாகவும் இருந்தது. மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 1029 கனஅடி நீர்வரத்து இருந்தது.

கடனாநதி அணை நீர்மட்டம் 62 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம் 51 அடியாகவும் இருந்தது. கடனாநதி அணைக்கு விநாடிக்கு 83 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 43 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகள் மூடப்பட்டுள்ளன. கடனாநதி அணையிலிருந்து 30 கனஅடியும், ராமநதி அணையிலிருந்து 15 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

## பாபநாசம், மணிமுத்தாறு நீர்மட்டம் மேலும் உயர்வு

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த மழையால் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் சில நாள்களாக பரவலாக மழை பெய்தது. அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த பலத்த மழையால் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு, கடனாநதி, ராமநதி அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்தது. ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணை நீர்மட்டம் 3.20 அடி உயர்ந்து 73.50 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 2,032.38 கனஅடி நீர்வரத்து இருந்தது. சேர்வலாறு அணை நீர்மட்டம் 2.90 அடி உயர்ந்து 86.61 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 89.90 அடியாகவும் இருந்தது. மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 1029 கனஅடி நீர்வரத்து இருந்தது.

கடனாநதி அணை நீர்மட்டம் 62 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம் 51 அடியாகவும் இருந்தது. கடனாநதி அணைக்கு விநாடிக்கு 83 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 43 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகள் மூடப்பட்டுள்ளன. கடனாநதி அணையிலிருந்து 30 கனஅடியும், ராமநதி அணையிலிருந்து 15 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

11.03.2013 A.M

## பேரையூர் தாலுகா மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி கருகிய பருத்தி செடிகள் மீண்டும் துளிர்விட்டது




பேரையூர்: மதுரை மாவட்டம், பேரையூர் தாலுகாவில் ஆயிரம் ஏக்கர் பரப்பில் நடப்பட்டிருந்த பருத்தி செடிகள், வறட்சியால் வாடி வதங்கி, கருகிய நிலையில், இயற்கை அன்னை காட்டிய "கருணை மழை'யால் மீண்டும் துளிர்விட்டு, விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.இத்தாலுகாவில் சிலைமலைப்பட்டி, பாறைப்பட்டி, கிருஷ்ணாபுரம், அரசபட்டி, கூவலப்புரம், பாப்பையாபுரம், பெரியபூலாம்பட்டி, நாகையாபுரம், சுப்புலாபுரம், தெய்வநாயகபுரம் பகுதிகளில் மானாவாரி நிலங்களில் ஆயிரம் ஏக்கரில் மழையை நம்பி, கடந்த ஜூலையில் விவசாயிகள் பருத்தி நட்டனர். ஆவணியில் கொஞ்சம் பெய்த மழையால், செடிகள் முளைத்து வந்தன. அதன் பின் நிலவிய கடும் வறட்சியால் செடிகளின் முளைப்பு திறன் பாதித்து, 10 மாத பருத்தி செடிகள், கருகிய நிலையில் குச்சிகளாக மாறிவிட்டன. இதனால், விவசாயிகள் கவலையில் ஆழ்ந்தனர்.கடந்த 25 தினங்களுக்கு முன்பிருந்து, இத்தாலுகாவில் பெய்து வரும் சிறு மழை, விவசாயிகளை மனங்குளிரச் செய்தது. 15 செ.மீ., மழை அளவு இப்பகுதியில் பதிவானது. இயற்கை அன்னையின் கருணையால், கருகிய பருத்தி செடிகள் பசுமைக்கு மாறி, மீண்டும் துளிர் விட்டு காய்கள் காய்த்துள்ளது.தெய்வநாயகபுரம் விவசாயி முருகேசன் கூறியதாவது:மானாவாரி விவசாயத்தை நம்பி, ரூ.20 ஆயிரம் வட்டிக்கு கடன் வாங்கி, 3 ஏக்கரில் பருத்தி நட்டேன். மழை இல்லாமல் வறட்சி தாண்டவமாடியது. ஏக்கருக்கு அரை குவிண்டால் பருத்தி கூட கிடைக்காத சூழ்நிலை இருந்தது. அவ்வப்போது பெய்த மழையால், பருத்தி செடிகள் உயிர் பெற்றன. இப்போதைய நிலவரப்படி, ஒரு ஏக்கருக்கு 7 குவிண்டால் பருத்தி கிடைக்கும் நம்பிக்கை உள்ளது.

உயிர் போய் மீண்டும் வந்துள்ள உணர்வு, இப்பகுதி பருத்தி விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது, என்றார்.

## குறைந்த தண்ணீர் வசதியில் மல்பெரி சாகுபடிக்கு அழைப்பு

தர்மபுரி: குறைந்த தண்ணீர் வசதியில், மல்பெரி செடி வளர்த்து விவசாயிகள் பயனடைய வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. பட்டுவளர்ச்சி துறை, உதவி இயக்குனர் ஜெயகுமார் வெளியிட்டுள்ள அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் கடந்த, 2002-3ம் ஆண்டுக்கு பின், போதிய பருவமழை பெய்யவில்லை. இதனால் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக, விவசாயிகள் பாதிக்கப்பட்டதுடன், வருவாய் இழப்பும் அடைந்துள்ளனர். குறிப்பாக, மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியால், பணப்பயிற்களான, கரும்பு, மஞ்சள், வாழை மற்றும் பூ செடிகள் சாகுபடி செய்தவர்கள், அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். வறட்சியிலும் விவசாயிகளுக்கு மல்பெரி சாகுபடி அதிக வருவாயை தரக்கூடிய ஒன்றாக உள்ளது. மல்பெரி, புது நடவு மானியமாக, ஏக்கர் ஒன்றுக்கு, ஆறாயிரத்து, 750 வீதம் அதிகபட்சமாக, 16 ஆயிரத்து, 875 ரூபாய் வழங்கப்படுகிறது. சிறு, குறு விவசாயிகளுக்கு, சொட்டு நீர் பாசனம் அமைக்க ஏக்கருக்கு, 20 ஆயிரம் ரூபாய் வீதம் அதிகபட்சமாக, 2.50 ஏக்கருக்கு, ஐந்து லட்ச ரூபாய் மற்றும் பிற விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு, 15 ஆயிரம் ரூபாய் வீதம், அதிகபட்சமாக, 2.50 ஏக்கருக்கு, 37 ஆயிரத்து, 500 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. 700 சதுர அடியில் பட்டுப்புழு மனை அமைக்க, 37 ஆயிரத்து, 500, ஆயிரம் முதல், ஆயிரத்து, 500 மனை அமைக்க, 75 ஆயிரம் ரூபாய், ஆயிரத்து, 500 சதுர அடிக்கு மேல் பட்டு ப்புழு வளர்ப்பு மனை அமைக்க, ஒரு லட்ச ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், பட்டுபுழு வளர்க்க விவசாயிகளுக்கு, 37ஆயிரத்து, 500 மதிப்பிலான, நவீன பட்டுபுழு வளர்ப்பு தளவாட பொருட்கள் மானியமாக வழங்கப்படுகிறது. புழு வளர்ப்பு மனை இயற்கை சீற்றத்தால் பாதிப்பு அடையும் போது, அதிகபட்டசமாக, 50 ஆயிரம் ரூபாய், பட்டு புழு வளர்ப்பு செய்யும் விவசாய குடும்பத்தினருக்கு, விபத்து காப்பீட்டாக, 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. பட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர் குடும்பத்தினருக்கு, ஏற்படும் மருத்துவ செலவிற்கு, ஆண்டிற்கு, 20 ஆயிரம் ரூபாய் வரை, காப்பீட்டு தொகையாக வழங்கப்படுகிறது. அனைத்து பட்டு விவசாயிகளுக்கும், ஓசூர் பட்டு பயிற்சி நிலையத்தில், 5 நாட்கள் நவீன பட்டு புழு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. வறட்சி காலத்தில் விவசாயிகள் குறைந்த நீரில், மானியம் மற்றும் அதிக லாபம் தரும் மல்பெரி செடிகளை வளர்த்து பயன் அடையளாம். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வறட்சியால் வாடிய கறிவேப்பிலை நிவாரண உதவி வழங்க கோரிக்கை

ஆத்தூர்: ஆத்தூர் பகுதியில், பாசன வசதியில்லாமல், கறிவேப்பிலை செடிகள், காய்ந்து கருகி வருவதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டத்தில், ஆத்தூர், தலைவாசல், வீரகனூர், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம் பகுதியில், வாசனை பயிரான கறிவேப்பிலை, 5,500 ஏக்கருக்கு மேல், சாகுபடி செய்யப்படுகிறது. ஆத்தூர், தலைவாசல் பகுதியில் விளைவிக்கப்படும் கறிவேப்பிலை, "ருசி' மிகுந்தும், வாசனையுடன் இருப்பதால், வியாபாரிகள் அதிகளவில் வாங்கிச் செங்கின்றனர். தலைவாசல் தினசரி மார்க்கெட், ஆத்தூர் பகுதியில் இருந்து, தினமும் சேலம், கோவை, திருச்சி, மதுரை, சென்னை, புதுச்சேரி, கேரளா என, பல்வேறு பகுதிகளுக்கு, கறிவேப்பிலை அனுப்பி வைக்கப்படுகிறது.

பருவ மழையில்லாததால், ஆறு, நீரோடை, விவசாய கிணறுகள் வறண்டு காணப்படுகிறது. விவசாய கிணற்று நீர் மட்டம் குறைந்ததால், சொட்டு நீர் பாசன முறையில் கூட, தண்ணீர் பாய்ச்ச முடியாமல், கறிவேப்பிலை செடிகள், காய்ந்து கருகி வருகிறது.

அதனால், கறிவேப்பிலை செடிகள், மஞ்சள் நிறமாக மாறி, உதிர்ந்து வருகிறது. அதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கறிவேப்பிலை உற்பத்தி குறைந்துள்ளதால், கிலோ, 30 ரூபாய் வரை, விற்பனையாகிறது.துலுக்கனூரை சேர்ந்த கறிவேப்பிலை விவசாயி மோகன்ராஜ் கூறியதாவது:ஏக்கருக்கு, 6,000 கறிவேப்பிலை செடிகள் நடவு செய்து, 15வது மாதத்தில் இருந்து, அறுவடை செய்யப்படும். மூன்று மாதத்துக்கு, ஒரு முறை ஏக்கருக்கு நான்கு முதல் ஐந்து டன் வரை, மகசூல் கிடைக்கும். தற்போது, பாசன வசதி இல்லாததால், ஏக்கருக்கு, ஒன்று அல்லது இரண்டு டன் மகசூல் மட்டுமே கிடைக்கிறது.சொட்டு நீர் பாசனத்துக்கு கூட, தண்ணீர் இல்லாததால், செடிகள் செத்து மடிகிறது. உணவு பொருட்கள் சமைப்பதில் முக்கியத்துவம் பெறும் கறிவேப்பிலை, வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை பட்டியலில் இல்லை. அதனால், அரசு மானியம், கடன் மற்றும் நிவராணம் போன்றவைகள் வழங்குவதில்லை.விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவி வழங்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## வறட்சியை சமாளிக்க விவசாயிகள் புது யுக்தி : நிழல் போர்வை அமைத்து சாகுபடி

பனமரத்துப்பட்டி: கம்மாளப்பட்டி பகுதியில், வறட்சியை சமாளிக்க, நிழல் போர்வை அமைத்து, சொட்டு நீர் பாசனம் மூலம் மிளகாய், தர்பூசணி போன்ற பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். சேலம், பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், பூக்கள்,காய்கறி, நெல், வாழை அதிக அளவில் பயிரிடப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக, பருவ மழை பொய்த்ததால், விவசாயம் செய்ய தேவையான தண்ணீருக்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வறட்சியால், ரோஜா, குண்டுமல்லி உள்ளிட்ட பூ செடிகள் காய்ந்து கருகி வருகிறது.
பனமரத்துப்பட்டி அடுத்த கம்மாளப்பட்டி பகுதி விவசாயிகள், வறட்சியை சமாளிக்க, நிழல் போர்வை அமைத்து, சொட்டு நீர் பாசனத்தில் பயிர் நடவு செய்து, கூடுதல் லாபம் பெறும் யுக்தியை கையாண்டு வருகின்றனர்.
வயலில் பயிருக்கு ஏற்ற வகையில் பாத்திகள் அமைத்து, பிளாஸ்டிக் விரிப்பு மூலம் பாத்தியை மூடி விடுகின்றனர். பிளாஸ்டிக் கவர் மேற்பகுதியில் தேவையான இடத்தில், ஓட்டை போட்டு, அதன் வழியாக மண்ணில் விதை, செடிகளை நடவு செய்கின்றனர்.
பயிரின் வேர் பகுதிக்கு மட்டுமே, சொட்டுநீர் பாசனம் மூலம் மிக குறைந்த தண்ணீர் விடப்படுகிறது. பிளாஸ்டிக் கவரின் மேற்பகுதியில் வளரும் செடிக்கு தேவையான சூரிய ஒளி கிடைக்கிறது. அதே சமயம், வேர் பகுதியில் தண்ணீரின் ஈரதன்மை பல நாட்களுக்கு நீடிக்கிறது. அதனால், செடி ஊக்கமாக வேகமாக வளர்ந்து, அதிக மகசூல் கொடுக்கிறது. கம்மாளப்பட்டி கிராமத்தில், குறைந்த தண்ணீரை பயன்படுத்தி நிழல் போர்வை அமைத்து, பத்து ஹெக்டேர் பரப்பளவில் மிளகாய், தர்பூசணி, முலாம் பழம், சம்பங்கி உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் நடவு செய்துள்ளனர்.கம்மாளப்பட்டி பகுதி விவசாயிகள் கூறியதாவது: கடும் வறட்சியால், கிணற்றில் தண்ணீர் வற்றி வருகிறது. விதை, செடி நடவு செய்யும் பாத்திகளில் நிழல் போர்வை அமைத்து, பயிர் நடவு செய்கிறோம். மிக குறைந்த தண்ணீரை கொண்டு, சொட்டு நீர் பாசனம் மூலம் பயிரின் வேர் பகுதிக்கு தேவையான தண்ணீர் விடுவதால், செடி நன்கு வளர்கிறது. பாத்தி முழுவதும் கவர் போட்டு மூடி விடுவதால், தேவையில்லாத புல், பூண்டு உள்ளிட்ட களைகள் முளைப்பதில்லை. இதனால், களை பறிக்கும் செலவு குறைகிறது. களை இல்லாததால், பயிர்களை நோய்கள் தாக்குவதும் மிக குறைவு. தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி கூடுதல் லாபம் கிடைக்கும். நிழல் போர்வை அமைக்க ஒரு ஏக்கருக்கு, 20 ஆயிரம் செலவாகும்.இவ்வாறு றினர்.தோட்டக்கலைத்துறை உதவி அலுவலர் ஒருவர் கூறியதாவது:நிழல் போர்வை அமைப்பதால், மிக குறைந்த பராமரிப்பு செலவில் கூடுதல் லாபம் பெற முடியும். நிழல் போர்வை அமைக்க, நவீன இயந்திரங்கள் உள்ளன.பாத்திகள் தயார் செய்தல், அடியுரம் இடுதல், சொட்டு

நீர் குழாய் அமைத்தல், பாத்திகளில் பிளாஸ்டிக் கவர் அமைத்தல், ஆகிய பணிகளை இயந்திரமே செய்து விடும். கோடை காலத்தில் நிழல் போர்வை அமைத்து, விவசாயிகள் பயன்பெறலாம்.இவ்வாறு கூறினார்.

### டெல்டா இல்லாத பகுதிக்கும் வறட்சி நிவாரணம் கிடைக்குமா?

கரூர்: "டெல்டா இல்லாத பிற பகுதிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவது பற்றி, தமிழக அரசின் பட்ஜெட்டில் அறிவிக்கப்படுமா?' என, விவசாயிகள் எதிர்பார்த்து காத்துள்ளனர். தமிழகத்தில் பருவமழை பொய்த்து போனதாலும், காவிரி நீரை கர்நாடகா அரசு திறந்துவிடாத நிலையிலும், டெல்டா பகுதிகள் உட்பட அனைத்து மாவட்டங்களிலும், வறட்சி காரணமாக விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், 50 சதவீதத்துக்கு மேல் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டங்களுக்கு, 15 ஆயிரம் ரூபாய் வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என, தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். பின் படிப்படியாக வறட்சி நிவாரணத்தொகை அப்பகுதிகளில் கொடுக்கப்பட்டது. இதில் கரூர் மாவட்ட காவிரி பாசன பகுதிகளான, குளித்தலை, கிருஷ்ணராயபுரம் தாலுகாக்கள் சேர்க்கப்பட்டன. மேலும், 50 சதவீதத்துக்கு மேல், மகசூல் பாதித்த நிலங்களை வருவாய் மற்றும் வேளாண்துறையினர் கணக்கெடுப்பு செய்தனர். அதன்படி குளித்தலையில், ஐந்து கிராமங்களில், 152 விவசாயிகளுக்கு, 206 ஏக்கருக்கு, 30 லட்சத்து, 99 ஆயிரத்து, 750 ரூபாய் மற்றும் கிருஷ்ணராயபுரத்தில், எட்டு கிராமங்களில், 152 விவசாயிகளுக்கு, 188 ஏக்கருக்கு, 28 லட்சத்து, 25 ஆயிரத்து, 250 ரூபாய் என, மொத்தம், 13 கிராமங்களைச் சேர்ந்த, 304 விவசாயிகளுக்கு, 395 ஏக்கருக்கு, 59 லட்சத்து, 25 ஆயிரம் ரூபாய் நிவாரணத்தொகை வழங்கப்பட்டது. ஆனால் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட, டெல்டா அல்லாத விவசாய பகுதிகள் அனைத்துக்கும், நிவாரணம் வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் வரும், 21ம் தேதி தாக்கல் செய்யும் தமிழக அரசின் பட்ஜெட்டில், இதற்கான அறிவிப்பு வரும் என, விவசாயிகள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். இதுகுறித்து விவசாய சங்க பிரதிநிதி ஒருவர் கூறியதாவது: காவரி பாசன பகுதியான குளித்தலை, கிருஷ்ணராயபுரம் உள்ள நெய்தலூர் வடக்கு, தெற்கு, முதலைப்பட்டி, நங்கவரம், சூரியனூர், பொய்யாமணி, இனுங்கூர், குமாரமங்கலம், மருதுர், மகாதானபுரம், லாலாப்பேட்டை உள்ளிட்ட கிராமங்களில், சாகுபடி செய்யப்பட்ட பயிர்களில், 65 சதவீதம் பயிர், தண்ணீரின்றி விளைச்சல் இல்லை. அறுவடை செய்யப்பட்ட நிலத்திலும், மிக குறைந்த அளவே பலன் கிடைத்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் அறுவடைக்கு முன்னரே, விவசாய நிலங்கள் ஆய்வு செய்யப்பட்டு, மொத்த

சேதமதிப்பு கணக்கிடப்பட்டது. கரூரில் பெரும்பகுதி அறுவடைக்கு பிறகே கணக்கு எடுப்பு செய்யப்பட்டுள்ளது. அதிகாரிகள் கிராமந்தோறும் அறுவடை கணக்கை மீண்டும் ஆய்வு செய்து, விவசாயிகளிடம் நேரடியாக விசாரணை நடத்த வேண்டும். இது மட்டுமல்லாது மாவட்டத்தின் பிற பகுதிகளில், நெல் மற்றும் பிற பயிர்கள் வறட்சியால் ஏற்பட்ட சேதம் குறித்து ஆய்வு செய்து, அறிக்கை அரசிடன் தாக்கல் செய்ய வேண்டும். அதன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, அரசு உரிய நிவாரணம் பற்றி, பட்ஜெட்டில் முதல்வர் அறிவிப்பார் என ஆவலுடன் காத்திருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார். இதுகுறித்து வேளாண்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""பட்ஜெட் பற்றி ஆலோசனைக் கூட்டத்தில், மாவட்ட வாரியாக வேளாண் அதிகாரிகள் பங்கேற்றனர். இதில் வறட்சியால் ஏற்பட்ட பாதிப்பு குறித்த அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், பட்ஜெட்டில் நிவாரணத்தொகை அறிவிக்கப்பட வாய்ப்பு உள்ளது," என்றார். ஆகையால் டெல்டா பகுதியல்லாத, வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள், வரும் பட்ஜெட்டில் தங்களுக்கு நிவாரணம் குறித்த அறிவிப்பு வெளியாகும் என்று நம்பிக்கையுடனும், ஆவலுடனும் காத்துள்ளனர்.

### தேயிலை தூள் வரத்து குறைவதால் இழப்பு

குன்னூர்: நீலகிரியில் தேயிலை தூள் வரத்து படிப்படியாக குறைந்து வருவதால் வருவாய் குறையும் நிலை உருவாகி வருகிறது.

நீலகிரியில் பல ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் தேயிலை சாகுபடி செய்யப்படுகிறது. தேயிலை தோட்டங்களில் பறிக்கப்படும் பசுந்தேயிலை, தொழிற்சாலைகள் மூலம் தேயிலை தூளாக உற்பத்தி செய்யப்பட்டு, குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையம் மற்றும் கூட்டுறவு தேயிலை ஏல மையத்தின் மூலம் வாரந்தோறும் விற்கப்படுகிறது. இந்நிலையில், நடப்பாண்டில் ஏற்பட்ட காலநிலை மாற்றங்களால், பசுந்தேயிலை வரத்து குறைந்து, ஏலத்திற்கு வரும் தேயிலைத் தூள் அளவும் குறைந்தது.

குன்னூர் தேயிலை ஏல மையத்தில், நடந்த மூன்றாம் வார ஏலத்தில், 16.97 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. நான்காவது ஏலத்தில் 15.03 லட்சம் கிலோவாக தூள் வரத்து குறைந்தது.

ஐந்தாம் ஏலத்தில் வரத்து 15.69 லட்சம் கிலோவாகவும், ஆறாம் ஏலத்தில் 14.02 லட்சம் கிலோவும், ஏழாம் ஏலத்தில் 14.92 லட்சம் கிலோவும், எட்டாம் ஏலத்தில் 12.52 லட்சம் கிலோவும், ஒன்பதாவது ஏலத்தில் 10.97 லட்சம் கிலோவும் வந்தது. வழக்கத்திற்கு மாறாக இந்தாண்டு

நகர்புறங்களில் கூட பனியின் தாக்கத்தை அதிகமாக இருந்தது. இதனால், வர்த்தகர்களுக்கான வருவாயிலும் பாதிப்பு ஏற்பட்டது. இனி வரும் பருவ மழை காலத்தில், எதிர்பார்த்த மழை பெய்தால் மட்டுமே தேயிலை மகசூல் அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகும்.

## வெற்றிலை விவசாயிகள் சங்கம் முதல்வருக்கு நன்றி அறிவிப்பு

ஆத்தூர் :ஆத்தூர் வட்டார வெற்றிலை விவசாயிகள் சங்கம் சார்பில் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட சட்டப்பூர்வ நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்கு உதவிய தமிழக முதல்வருக்கு ஆத்தூர் வட்டார வெற்றிலை விவசாயிகள் சங்கம் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழக முதல்வருக்கு சங்கத் தலைவர் சதீஸ்குமார், செயலாளர் ராஜகோபால், பொருளாளர் மகராஜன், துணைத்தலைவர் சுப்பிரமணியன், துணைத் செயலாளர் மூக்காண்டி ஆகியோருடன் சங்க செயற்குழு உறுப்பினர்களும், விவசாயிகளும் இணைந்து ஆத்தூர் சுற்றுப்பகுதி வெற்றிலை விவசாயிகள் சார்பில் நன்றியை

## வறட்சியால் கரும்பு சாகுபடி பாதிப்பு இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை

காளையார்கோவில்: காளையார்கோவில் பகுதியில் வறட்சியால் பாதித்த கரும்பு சாகுபடிக்கு இழப்பீடு வழங்குவதுடன், ஊக்குவிப்பு திட்டங்கள் செயல்படுத்த வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்ஒன்றியத்தில் கிணற்று பாசன முறையில் 5 ஆயிரம் ஏக்கரில் கடலை சாகுபடி செய்து வந்தனர்.தேசியவேலை உறுதியளிப்பு திட்டத்தில் மக்கள் செல்வதால், விவசாயப்பணிக்கு வேலை ஆட்கள் கிடைப்பதில்லை. வேலை ஆட்கள் பற்றாக்குறை,மகசூல் குறைவு காரணமாக கடலை சாகுபடி குறைந்து விட்டது. விவசாயிகளும் சொட்டுநீர், வாய்க்கால் பாசனமுறையில் 600 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்து வருகிறார்கள். நடப்பு ஆண்டு பருவ மழை பொய்த்து விட்டதால், நீர்மட்டம் குறைந்து கிணறுகளில் தண்ணீர் இல்லை.போதுமான தண்ணீர் இல்லாமல் கரும்பு சாகுபடி மகசூல் குறைந்து,நஷ்டம் அடைந்துள்ளனர். விவசாயி முருகன் கூறுகையில்,"" ஒரு ஏக்கருக்கு வாய்க்கால் பாசனமுறையில் கரும்பு சாகுபடி மகசூல் 70 டன்,சொட்டு நீர் பாசனத்தில் 50 டன் வரை கிடைக்கும். 2 ஏக்கர் சாகுபடி செய்து 20 டன் மகசூல் வந்துள்ளது. ஒரு ஆண்டு கஷ்டப்பட்டும் நஷ்டம் ஆகிவிட்டது. அரசு நெல் சாகுபடியை போன்று கரும்புக்கும் இழப்பீடு வழங்க வேண்டும். அரசும்,சர்க்கரை ஆலையும் இணைந்து வெட்டுக்கூலியை ஏற்றுக்கொள்வதுடன், ஊக்குவிப்பு திட்டங்களையும் செயல்படுத்த வேண்டும்,"என்றார்.

## தமிழகத்தில் 75 மாதிரி கிராமங்களுக்கு தோட்டக்கலைத்துறை ரூ.75 கோடி நிதி

தேனி: தமிழகத்தில் தோட்டக்கலை திட்டங்களை முழுமையாக செயல்படுத்தி, 15 மாவட்டங்களில் நவீனமான 75 மாதிரி கிராமங்களை உருவாக்க, 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தோட்டக்கலைத்துறையில் அனைத்து தொழில்நுட்பங்கள், அனைத்து மானியங்களையும் முழுமையாக பயன்படுத்தி, முழு அளவில் வளர்ச்சி பெற்ற மாதிரி கிராமங்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. திருவள்ளூர், வேலூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோவை, நீலகிரி, திருச்சி, பெரம்பலூர், மதுரை, தேனி, திண்டுக்கல், ராமநாதபுரம், நெல்லை ஆகிய 15 மாவட்டங்களில் 75 மாதிரி கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும், மூன்று ஆண்டுகளில் தோட்டக்கலைத்துறை சார்பில் ஒரு கோடி ரூபாய் அளவில் மானிய திட்டங்களை முழுமையாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்து விவசாயிகளுக்கும்,முழுமையான தொழில்நுட்பங்களை கற்றுக்கொடுத்து மானியங்களை வழங்கி, அந்த கிராமத்தையே மாதிரி கிராமமாக மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு மாதிரி கிராமத்திற்கும் ஒரு தோட்டக்கலை உதவி அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மூலமே இந்த தொழில்நுட்ப திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

## ரயில் மூலம் நெல் மூட்டைகள் அனுப்பும் பணி துவக்கம்

திருவாரூர்: திருவாரூரில் இருந்து நெல் அரவைக்கு, வெளி மாவட்டங்களுக்கு அனுப்பும் பணி துவங்கியது. திருவாரூர் மாவட்டத்தில் அறுவடையாகும் சம்பா பருவ நெல், நுகர் பொருள் வாணிபக்கழகம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, திருவாரூர் விளமல், பாமணி, கடாரங்கொண்டான், கடகம்பாடி, நட்டுவாக்குடி திருவோணமங்கை, குடவாசல், அமராவதி, மூவாநல்லூர் உள்ளிட்ட, 15க்கும் மேற்பட்ட திறந்தவெளி கிடங்கில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பொதுவிநியோக பயன்பாட்டுக்காக, இந்த நெல்லை அரவை செய்ய, வெளி மாவட்டங்களுக்கு அனுப்பும் பணி துவங்கியுள்ளது. திருவாரூரில் இருந்து முதற்கட்டமாக நேற்று, சரக்கு ரயில் மூலம், 1,200 டன் நெல் ஓசூருக்கு அரவைக்கு அனுப்பினர். சென்னை, மதுரை, தர்மபுரி,சேலம் உள்ளிட்ட மாவட்டங்களுக்கும் அரவைக்கு நெல் மூட்டைகளை அனுப்ப உள்ளதாக நுகர் பொருள் வாணிபக்கழகத்தினர் தெரிவித்தனர்.

## 15ம் தேதி முதல் தொடர்போராட்டம் தமிழக விவசாயிகள் சங்கம் அறிவிப்பு

தஞ்சாவூர்: தஞ்சையில் நடந்த நன்றியறிவிப்பு விழாவில், விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவது குறித்தும், கடன் தள்ளுபடி அறிவிப்பையும் முதல்வர் வெளியிடாததால், ஏமாற்றமடைந்த விவசாயிகள் வரும், 15ம் தேதி முதல் தொடர் போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளனர். காவிரியில் தமிழகத்தின் பங்களிப்பு நீரை கர்நாடகா அரசு

திறந்துவிடாததாலும், தமிழகத்தில் பருவமழை பொய்த்ததாலும், டெல்டா பாசன பகுதிகளில் கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால், தாளடி, குறுவை, சம்பா பயிர்கள் கருகி, சாகுபடி அடியோடு பாதித்தது. இதையடுத்து, நிதியமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையில் உயர்மட்ட குழுவினர் டெல்டாவில் ஆய்வு நடத்தி, முதல்வருக்கு அறிக்கை அளித்தனர். அதன்படி, கடந்த ஃபிப்ரவரி, 8ம் தேதி தமிழக சட்டசபையில், டெல்டா விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என, முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். முதல்வர் அறிவிப்புப்படி, திருவாரூர் மாவட்டத்தில், ஒரு லட்சத்து, 47 ஆயிரம் ஏக்கருக்கும், நாகை மாவட்டத்தில், ஒரு லட்சத்து, 75 ஆயிரம் ஏக்கருக்கும் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தஞ்சை மாவட்டத்தில், 12 ஆயிரத்து, 249 ஏக்கருக்கு மட்டும், 18.37 கோடி ரூபாய் நிவாரணம் அறிவிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள, 4.25 லட்சம் ஏக்கரில் பாதிப்படைந்த நெற்பயிருக்கு இழப்பீடு வழங்காமல், ஒரு லட்சம் விவசாயிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். விடுபட்ட அனைவருக்கும் நிவாரணம் வழங்குவது பற்றியும், விவசாய கடன் தள்ளுபடி பற்றியும், தஞ்சையில் நடந்த நன்றியறிவிப்பு விழாவில், முதல்வர் அறிவிப்பு வெளியிடுவார் என, தஞ்சை விவசாயிகள் பெரிதும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், கடைசிவரை முதல்வர் அறிவிப்பு ஏதும் வெளியிடவில்லை. இதனால், தஞ்சை மாவட்ட விவசாயிகள் வரும், 15ம் தேதி முதல் தொடர் போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளனர். இது குறித்து தமிழக விவசாயிகள் சங்கத்தின் தஞ்சை மாவட்டத்தலைவர் சுகுமாரன் கூறியதாவது: வறட்சி நிலவிய போதும் முதல்வர் நிவாரணம் அறிவிக்கவில்லை. கவர்னர் உரையிலும் அறிவிப்பு இல்லை. ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்ற முதல்வர் அறிவிப்பாலும், தஞ்சை விவசாயிகளுக்கு பயனில்லை. இந்நிலையில், தஞ்சை வந்த முதல்வர், விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரணம், கடன் தள்ளுபடி குறித்து வாய் திறக்கவில்லை. இதை கண்டித்து, அனைத்து கட்சியினர், அமைப்பினரை திரட்டி வரும், 15ம் தேதி முதல் தொடர் போராட்டம் நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

இன்றைய வேளாண் செய்திகள்

11.03.2013 A.M

## மழை ஓய்ந்தாலும் தண்ணீர் வரத்து பாபநாசம், சேர்வலாறு நீர்மட்டம் உயர்ந்தது



நெல்லை: நெல்லை மாவட்டத்தில் 4 நாட்களாக பெய்த மழை நேற்று ஓய்ந்தது. ஆயினும் பாபநாசம், சேர்வலாறு அணைகளில் நீர்மட்டம் மேலும் 3 அடி தண்ணீர் கூடியது.நெல்லை மாவட்டத் தில் நிலவிய கடும் வறட்சியால் அணைகளில் நீர்மட்டம் வேகமாக குறைந்து வந்தது. இதே நிலை நீடித்தால் கோடையில் தண்ணீர் தட்டுபாடு ஏற்படும் அபாயம் உருவானது. 144 அடி நீர்மட்டம் கொண்ட பாபநாசம் அணையில் கடந்த 6ம் தேதி நிலவரப்படி 44.50 அடி தண்ணீர் மட்டுமே இருந்தது. இதனால் விரைவில் அணையை மூடும் நிலை உருவானது.இந்நிலையில் இலங்கை அருகே தோன்றிய திடீர் காற்றழுத்த தாழ்வு நிலையால் நெல்லை மாவட்டத்தில் 4 நாள் பரவலாக மழை பெய்தது. மேற்கு தொடர்ச்சி மலை நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையால் அணைகளின் நீர் மட்டம் யாரும் எதிர்பார்க்காதா வண்ணம் கிடுகிடுவென உயர்ந்தது.நேற்று (ஞாயிறு) மாவட்டத்தில் மழை ஓய்ந்த நிலையிலும் அணைகளுக்கு நீர்வரத்து அதிகம் இருந்தது. இதனால் பாபநாசம் அணையில் 70.30 அடியாக இருந்த நீர்மட்டம் மேலும் 3 அடி உயர்ந்து 73.50 அடி ஆனது. அணைக்கு வினாடிக்கு 2 ஆயிரத்து 32.38 கன அடி நீர் வருகிறது. அணையில் இருந்து தண்ணீர் வெளியேற்றப்படவில்லை. இதேபோல் சேர்வலாறு 83.96 அடியாக இருந்த நீர்மட்டம் மேலும் 3 அடி உயர்ந்து 86.61 அடியாக அதிகரித்தது.

மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 88.75 அடியில் இருந்து ஒரு அடி உயர்ந்து 89.90 அடி ஆனது. கடனா அணை நீர்மட்டம் 62 அடியாக உயர்ந்தது. அணைக்கு 83.42 கன அடி நீர் வருகிறது.

வடக்கு பச்சையாறு அணை தொடர்ந்து வறண்ட நிலையிலேயே உள்ளது.4 நாளாக பெய்த மழை யால் பாபநாசம் அணை யில் மட்டும் நீர்மட்டம் 30 அடி வரை உயர்ந்துள்ளது. திடீர் மழையால் சில இடங்களில் பிசான நெல் அறுவடை பணி பாதிக்கப்பட்டது. ஆனால் கோடை யை ஓரளவு சமாளிக்கும் வகையில் 3 முக்கிய அணைகளில் தண்ணீர் அதிகரித்துள்ளது பொதுப்பணித்துறை,குடிநீர் வடிகால் வாரிய துறையினருக்கு திருப்தியை தந்துள்ளது. மாவட்டத்தில் நேற்று மழை ஓய்ந்த நிலையில், மாலையில் நெல்லை உள்பட சில இடங்களில் கருமேகம் திரண்டு சிறு தூறல் விழுந்தது.

## பஞ்சு விலை கடும் உயர்வு ஆலைகள் மூடப்படும் அபாயம்



கோவை : பஞ்சு விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், பஞ்சாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்படும் அபாயம் உள்ளதாக ஆலை உரிமையாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். இது பற்றி, தென்னிந்திய பஞ்சாலை உரிமையாளர்கள் சங்க (சிஸ்பா) தலைவர் திருநாவுக்கரசு கூறியதாவது: ஜனவரியில் நடைபெற்ற பருத்தி ஆலோசனை குழு கூட்டத்தின் கணிப்பின்படி, நடப்பாண் டில் 390 லட்சம் பேல் உற்பத்தியாகும் எனவும், அதில் உள்நாட்டு தேவை 276 லட்சம் பேல் எனவும், 80 லட்சம் பேல் ஏற்றுமதிக்கு போக, 34 லட்சம் பேல் இருப்பாக இருக்கும் என கூறப்பட்டது. இதனால், 365 கிலோ கொண்ட ஒரு கண்டியின் பஞ்சு விலை ரூ.33 ஆயிரத்தில் இருந்து ரூ.38 ஆயிரமாக உயர்ந்தது. இதுவரை சுமார் 75 லட்சம் பேல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகிறது.

இதனால், பஞ்சு விலை அபரிமிதமாக உயர்ந்துள்ளது. தேவைக்கு ஏற்ப பஞ்சு கொள்முதல் செய்யும் சிறு மற்றும் நடுத்தர ஆலைகள் இந்த நெருக்கடிகளை சமாளிக்க முடியாமல் பெரிதும் தத்தளிக்கின்றன. பஞ்சு தட்டுப்பாடு உள்ளதாக தகவல் வெளி யிட்டு பெரிய பஞ்சு வியாபாரிகளும், இடைத்தரகர்களும், பன்னாட்டு நிறுவன ங்களும் செயற்கையான விலை ஏற்றம்

செய்து லாபம் ஈட்டி வருகின்றனர்.

இத்தருணத்தில், சிறு மற்றும் நடுத்தர நூற்பாலைகளுக்கு நியாயமான விலையில் தரமான பஞ்சு கிடைக்க இந்திய பருத்தி கழகம் வழிவகை செய்ய வேண்டும். பஞ்சு விலை உயர்வு தொடர்ந்து நீடித் தால் சிறு மற்றும் நடுத்தர ஆலைகளின் உற்பத்தி பாதிக்கப்பட்டு மூடும் அபாயம் ஏற்படும். எனவே, மத்திய, மாநில அரசுகள் நூற்பாலைகளுக்கு நியாயமான விலையில், தரமான பஞ்சு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்றார்.

## தேயிலை தூள் விலை கிலோவுக்கு ரூ.4 உயர்வு



குன்னூர்: குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 10வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளி நாட்களில் நடந்தது. மொத்தம் 9.60 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இது கடந்த 10 ஏலங்களில் வந்ததை விட குறைவான அளவாகும். ஏலத்தில் வட மாநில வர்த்தகர்களின் பங்களிப்பு அதிகரித்ததால் தேயிலை தூளை போட்டி போட்டு கொள்முதல் செய்தனர்.

இதனால் 97 சதவீத தூள் விற்பனையானதுடன், அனைத்து ரகத்துக்கும் கிலோ ரூ.4 வரை விலை உயர்வு காணப்பட்டது. இலை ரகம் சாதா கிலோ ரூ.82 முதல் ரூ.85 வரையும், உயர் வகை ரூ.120 முதல் ரூ.155 வரையிலும் விற்றன. டஸ்ட் ரகம் சாதா கிலோ ரூ.92 முதல் ரூ.95 வரையும், உயர் வகை ரூ.120 முதல் ரூ.160 வரையும் விற்றன. சிடிசி ரகத்துக்கு அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.209ம், ஆர்த்தோடக்ஸ் ரகத்துக்கு ரூ.225ம் கிடைத்தது.

## விலை ஏற வாய்ப்பில்லை சூரியகாந்தியை உடனே விற்கலாம்



கோவை: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி சோமசுந்தரம் வெளியிட்ட அறிக்கை: கரூர், திருச்சி, தூத்துக்குடி, தர்மபுரி, விருதுநகர், திண்டுக்கல், நெல்லை, திருவண்ணாமலை, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் சூரியகாந்தி உற்பத்தியாகியுள்ளது. அதிக விலை கிடைப்பதற்கான வாய்ப்புகளை எதிர்நோக்கி விவசாயிகள் சூரியகாந்தியை உடனே விற்கலாமா அல்லது இரண்டு, மூன்று மாத ங்கள் தள்ளி விற்கலாமா என காத்திருக்கின்றனர் வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையமானது, வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 12 வருடங்களாக நிலவிய சூரியகாந்தி விதையின் விலைகளை ஆராய்ந்தது. ஏப்ரல் , ஜூன் 2013ல் கிலோவுக்கு ரூ.36,38 வரை இருக்கும் என ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கிறது. விலை ஏற்றத்திற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது. எனவே, விவசாயிகள் சூரியகாந்தி விதையை அறுவடை செய்ததும் உடனே விற்றுவிடும்படி பரிந்துரைக்கப்படுகின்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்
11.03.2013 A.M

## வயல் தினவிழா திருந்திய நெல்சாகுபடி முறையில் குறைந்த நீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவது எப்படி? விவசாயிகளுக்கு நேரில் விளக்கம்

ஸ்ரீவில்லிபுத்தூர் ,

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே நடந்த வயல் தினவிழாவில் திருந்திய நெல்சாகுபடி முறையில் குறைந்த நீரை பயன்படுத்தி விவசாயிகளுக்கு அதிக மகசூல் பெறுவது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

வயல் தினவிழா

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரம் விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின்(அட்மா)கீழ் அத்திக்குளம்–தெய்வேந்திரி கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடிக்கான வயல் தினவிழா நடந்தது. விவசாயி தேவப்பிரியம் என்பவர் வயலில் நடந்த விழாவுக்கு வேளாண்மை உதவி இயக்குனர் ஆறுமுகம் தலைமை தாங்கி பேசினார். அப்போது திருந்திய நெல் சாகுபடி குறித்த தொழில்நுட்பங்களை விளக்கி கூறினார். வயல்தின விழா நோக்கத்தை வேளாண்மை அலுவலர் முத்துலட்சுமி எடுத்து கூறினார். அப்போது திருந்திய நெல் சாகுபடி முறையில் குறைந்த நீரை பயன்படுத்தி அதாவது நெல்பயிருக்கு நீர் மறைய நீர்கட்டி அதிகமான மகசூல் பெற்றதை அனைத்து விவசாயிகளுக்கும் தெரிய படுத்த வேண்டும். அதாவது வரும் பருவத்தில் அனைத்து விவசாயிகனும் இதை கடைபிடிக்க வேண்டும் என்றார்.திருந்திய நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 3 கிலோ விதையை ஒரு சென்டில் விதைத்து 14 நாள் வயதுள்ள ஒன்றை இளநாற்றை 25க்கு 25 செ.மீ. என்ற இடைவெளியில் மார்க்கர் கருவி கொண்டு நடவு செய்ய வேண்டும். வயலில் நீரை தேக்கி வைக்க வேண்டிய அவசியம் இல்லை. நீர் மறைய நீர்கட்டு முறையில் பாசனம் செய்தல் வேண்டும். இதனால் பாசன நீர்த்தேவை 40 முதல் 50 சதவீதம் குறைவாகவே தேவைப்படும். நீர்ப்பாசனத்திற்கான மின்சாரம் செலவு குறையும். இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தழைச்சத்து இடுவதால் உரச்செலவும் குறையும். களைகளை கட்டுப்படுத்த கோனோ களைக்கருவி கொண்டு களை எடுத்தால் ஆட்கள் செலவு குறையும்.களைக்கருவிகளை கொண்டு 10,20, 30,40 ஆகிய நாட்களில் குறுக்கம், நெடுக்குமாக உருட்ட வேண்டும். இதனால் பயிருக்கு

சாயாத தன்மை அதிகரிக்கிறது. அதிகமாக கதிர்கள் உருவாகி அதிக மணிகள் பிடிக்கிறது. திருந்திய நெல்சாகுபடி முறையை கடைபிடிப்பதால் மகசூல் அதிகரிக்கிறது. வயல் தினவிழாவில் 100–க்கும்மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். வட்டார தொழில் நுட்ப வல்லுனர் கலா நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை விரிவாக்க சீரமைப்பு திட்ட தொழில்நுட்ப வல்லுனர்கள் பெருமாள்சாமி மற்றும் தெய்வேந்திரன் ஆகியோர் செய்திருந்தனர்.

## மரக்காணம் ஒன்றிய பகுதியில் தர்பூசணி அறுவடை தீவிரம்; பருவநிலை மாற்றத்தால் விளைச்சல் பாதிப்பு விவசாயிகள் கவலை

திண்டிவனம்,

மரக்காணம் ஒன் றியத் தில் தர்பூசணி அறுவடை தொடங்கிய நிலையில் பருவ நிலை மாற்றம் காரணமாக அதன் விளைச்சல் பாதிக் கப் பட்டுள்ளதால் விவ சாயிகள் மிகவும் கவலை அடைந் துள்ளனர்.

தர்பூசணி

திண்டிவனம் வட்டம், மரக்காணம் ஒன்றியம், வண் டிபாளையம், நடுக்குப்பம், அடசல், கிழாபக்கம், ஓமிப்பேர் உள்பட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் வருடந்தோறும் கோடை காலத்தை முன்னிட்டு விவசாயிகள் அதிக அளவில் நீர்சத்து நிறைந்த தர்பூசணியை பயிர் செய்து வருகின்றனர்.

அதன் படி நடப்பாண்டில் கடந்த ஜனவரி மாதத்தில் விவசாயிகள் மிகுந்த ஆர்வத் துடன் தர்பூசணி பயிரினை பயிர் செய்தனர். தற்போது அவை விளைச்சல் அடைந் ததை யட்டி அதனை அறுவடை செய்யும் பணி யினை விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஏற்றுமதி

இது குறித்து ஓமியப்பேரி கிராமத்தை சேர்ந்த வேலாயுதம் என்ற விவசாயி கூறியதாவது:-

திண்டிவனம் பகுதியில் பயிர் செய்யபடும் தர்பூசணி பழத்திற்கு அதிக சுவை இருப்பதால் ஆந்திரா, புதுச்சேரி, கர்நாடகா .கேரளா உள்பட வெளி மாநிலங்கள் மற்றும் தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான வியாபாரிகள் இங்கு வந்து தங்களுக்கு வேண்டிய தர்பூசணி பழத்தினை கொள்முதல் செய்து சென்று வருகின்றனர். தர்பூசணி பழமானது கடந்த வருடம் நன்கு விளைச்சல் பெற்று இருந்தது. இதன் காரணமாக நடப்பாண்டில் மேலும் அதிகமாக தர்பூசணியை பயிர் செய்தேன்.

இதன் மூலம் நல்ல வருமானம் கிடைக்கும் எனவும் எதிர் பார்த்தேன். ஆனால் பருவ மழை சரியாக பெய்யாமல் இருந்ததோடு, தேவையற்ற நிலையில் மழை பெய்ததன் விளைவாக தற்போது தர்பூசணி விளைச்சல் மிகவும் பாதிக் கப்பட்டுள்ளது.

விலை குறைவு

இதன் காரணமாக கடந்த ஆண்டு ஏக்கருக்கு 12 டன் வரையில் தர்பூசணி விளைச்சல் பெற்றிருந்த நிலையில் தற்போது 8 டன் அளவிற்கு மட்டுமே அவை விளைச்சல் பெற்றுள்ளது. மேலும் கடந்த முறை தர்பூசணி பழமானது அதிகபட்சம் சுமார் 20 கிலோ வரையில் விளைச்சல் பெற்று இருந்தது. ஆனால் இப்போது 10 கிலோ அளவிற்கு கூட தர்பூசணி பழம் விளைச்சல் பெறவில்லை. இதற்கிடையில் பழம் சிறியதாக இருப்பதால் விலையும் பாதியாக குறைந்துள்ளது. 1 டன் பழம் ரூ. 6ஆயிரத்திற்கு விற்று வந்த நிலையில் தற்போது ரூ. 3 ஆயிரத்தில் 500-க்கு மட்டுமே விற்கபடுகிறது. இதனால் எங்களை போன்ற விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 50 ஆயிரம் வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே எங்களை போன்று பாதிக்கப்பட்ட தர்பூசணி விவசாயி களுக்கு அரசு நிவாரண தொகை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாய நிலங்களில் பண்ணை குட்டைகள் அமைத்து மீன் வளர்க்க அழைப்பு கலெக்டர் தகவல்

கரூர்,

விவசாய நிலங்களில் பண்ணை குட்டைகள் அமைத்து மீன் வளர்க்க லாம் என கலெக்டர் தெரிவித்துள்ளார்.

பண்ணை குட்டைகள்

இதுகுறித்து கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:–

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக 31 மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக தமிழக அரசு அறிவித்து உள்ளது.

இதனை தொடர்ந்து தமிழக முதல்–அமைச்சர் வறட்சியை சமாளிக்கும் பொருட்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் இலவசமாக விவசாய நிலங்களில் பண்ணை குட்டைகள் அமைத்து மீன் வளர்க்க ஆணை பிறப்பித்து உள்ளது.

இதன் படி கரூர் மாவட்டத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் இத் திட்டத்தின்  கீழ் விருப்பமுள்ள ஆதிதிராவிட விவசாயிகள் மற்றும் இதர வகுப்பினரை சேர்ந்த சிறு, குறு விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களில் பண்ணை குட்டைகள் அமைக்க அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வட்டார வேளாண்மை துறை அலுவலரை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

மேலும்  இவ்வாறு அமைக்கப்பட்ட பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு மீன் வளர்ச்சி துறை மூலம் மீன்கள் வளர்க்க இலவசமாக ஏற்பாடுகள் செய்து தரப் படும்.

இவ்வாறு அந்த  செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

## குன்னூர் ஏல மையத்தில் 97 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர்,

குன்னூர் ஏல மையத்தில் 97 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

தேயிலை ஏலம்

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந் தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள்.

விற்பனை எண் 10–க்கான ஏலம் கடந்த 7, 8 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 9 லட்சத்து 60 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 7  லட்சத்து 14 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 2 லட்சத்து 46 ஆயிரம் கிலோ டஸ்ட் ரக மாகவும் இருந்தது.

97 சதவீத தேயிலை தூள் விற்பனை

இந்த ஏலத்தில் 97 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் ரூ.4 விலை உயர்வு இருந்தது. சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 209 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் 275 ரூபாய் என்று உயர்ந்த பட்ச விலை யாக ஏலம் சென்றது.

சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 82 ரூபாயில் இருந்து 85 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாயில் இருந்து 155 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 92 ரூபாயில் இருந்து 95 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாயில் இருந்து 160 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

விற்பனை எண் 11–க்கான ஏலம் வருகிற 14, 15 ஆகிய தேதிகளில் நடக்கிறது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 8 லட்சத்து 60 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

## உரங்களின் விலை அதிகரிப்பு எதிரொலி: தேயிலை தோட்டங்களில் உரமிட விவசாயிகள் தயக்கம்

குன்னூர்,

உரங்களின் விலை உயர்ந்து வருவதால் தேயிலை தோட்டங்களில் உரமிடலாமா என்று விவசாயிகள் தயக்கம் காட்டி வருகிறார்கள்.

தேயிலை விவசாயம்

குன்னூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பிரதான விவசாயமாக தேயிலை விவசாயம் இருந்து வருகிறது. தேயிலை விவசாயத்திற்கு வெயிலும், மழையும் சம அளவு இருக்க வேண்டியது உள்ளது.

இந்த நிலையில் கடந்த ஆண்டு பெய்ய வேண்டிய பருவமழை சரியான முறையில் பெய்யவில்லை. இதன் காரணமாக தேயிலை மகசூல் கடுமையாக பாதித்து உள்ளது. தேயிலை மகசூல் குறைவு காரணமாக சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

குன்னூரில் மிதமான மழை

இந்த நிலையில் விவசாயிகளுக்கு ஆறுதல் தரும் விதமாக வங்கக்கடலில் புயல் சின்னம் உருவானது. இந்த புயலின் காரணமாக கடந்த 3 நாட்களாக குன்னூர் பகுதியில் மழை பெய்து வருகிறது.

இந்த மழை மிதமான மழையாகவும், ஒரு சில நேரத்தில் பலத்த மழையாகவும் பெய்து வருகிறது. இந்த மழை விவசாயத்திற்கு உகந்த மழையாக உள்ளது. தேயிலையை பொறுத்த வரை மழை கிடைக்கும் போது, உரமிட்டால் அதிகளவு மகசூல் கிடைக்கும் நிலை இருந்து வருகிறது.

உரங்கள் விலை உயர்வு

வறட்சியினால் காய்ந்த நிலையில் உள்ள தேயிலை செடிகள் இந்த மழையின் காரணமாக துளிர்விட ஆரம்பிக்கும். இந்த நிலையில் தேயிலை செடிகளுக்கு உரமிடும் போது, துளிர் விடுவது துரிதமாக நடைபெறும்.

இந்த நிலையில், உரங்களின் விலை கடுமையாக உயர்ந்து உள்ளது. அமோனியா பேஸ் மற்றும் யூரியா பேஸ் உரங்களின் விலைகள் உயர்ந்து உள்ளதால் விவசாயிகளால் உரம் வாங்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.

கோரிக்கை மழை பெய்து விவசாயிகளுக்கு ஒரு புறம் மகிழ்ச்சி ஏற்படுத்தினாலும், மறுபுறம் உரத்தின் விலை உயர்வு விவசாயிகளை கலக்கம் அடைய செய்து உள்ளது. எனவே உரங்களின் விலையை குறைக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

## மேட்டுப்பாளையம் மொத்த காய்கறி மண்டிகளில் மேரக்காய் அதிக விலைக்கு விற்பனையாவதால் விவசாயிகள் மகிழ்ச்சி

கொலக்கம்பை,

மேட்டுப்பாளையம் மொத்த காய்கறி மண்டிகளில் மேரக்காய் அதிக விலைக்கு விற்பனை யாவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

மலை தோட்ட காய்கறிகள்

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தோட்டத்திற்கு அடுத்தபடியாக மலைதோட்ட காய்கறி பயிர்களான பீன்ஸ், உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், கேரட், மேரக்காய் உள்ளிட்ட காய்கறி பயிர்களை விவசாயிகள் பயிர் செய்து அதன் மூலம் பயன் அடைந்து வருகிறார்கள்.

கொலக்கம்பை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதி களான தூதூர் மட்டம், கெரடாலீஸ், குன்ன கொம்பை, தைமலை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் இப்பகுதி விவசாயிகள் பீன்ஸ், மேரக்காய் உள்ளிட்ட மலைத்தோட்ட பயிர்களை பயிர் செய்து உள்ளனர்.

பனியில் கருகிய மேரக்காய் கொடிகள்

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 2 மாதங்களாக பனி பொழிவு இருந்தது. இதனால் தாழ்வான மற்றும் நீரோடை பகுதிகளில் பயிரிடப்பட்டு இருந்த மேரக்காய் கொடிகள் உரைப்பனி தாக்குதலில் தாக்குப்பிடிக்க முடியாமல் முற்றிலும் கருகின.

இதையடுத்து, கருகிய மேரக்காய் கொடிகளை அகற்றிய விவசாயிகள் தங்களுடைய நிலங்களில் பீன்ஸ் பயிர்களை பயிர் செய்து உள்ளனர்.

தற்போது தைமலை, குன்ன கொம்பை, கோடேரி உள்ளிட்ட மேடான பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் மட்டுமே மேரக்காய் பயிர்கள் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விவசாயிகள் மகிழ்ச்சி

சீசன் காலங்களில் நாள் ஒன்றுக்கு இப்பகுதிகளில் இருந்து குறைந்தது 20 டன் முதல் 30 டன் வரை மேரக்காய்கள் அறுவடை செய்யப்படும். இந்த மேரக்காய்கள் மேட்டுப்பாளையம் மொத்த காய்கறி மண்டிகளுக்கு எடுத்து செல்லப்பட்டு விற்பனை செய்யப்படும்.

தற்போது குறைந்தளவே மேரக்காய் உற்பத்தியாவதால் மேட்டுப்பாளையம் காய்கறி மண்டிகளில் ஒரு கிலோ மேரக்காய் ரூ.25 முதல் ரூ.38 வரை விற்பனையாகி வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## பரமத்திவேலூர் தினசரி மார்க்கெட்டில் பூக்கள் விலை திடீர் உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி

பரமத்திவேலூர்,

பரமத்திவேலூர் தினசரி மார்க்கெட்டில் பூக்கள் விலை திடீர் உயர்வு அடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

பூக்கள் பயிரீடு

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகாவில் உள்ள கொளக்காட்டு புதூர், அண்ணா நகர், நெட்டை யாம்பாளையம், செங்கப் பள்ளி, எல்லை மேடு, கரூர் மாவட்டம் சேமங்கி, முத்த னூர், மூலிமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் பூக்கள் பயிரிடப்பட்டு உள் ளது.

இந்த பகுதிகளில் விளையும், சம்பங்கி, துளசி, குண்டு மல்லி, செவந்திப்பூ, கோழி கொண்டை, ரோஜா உள் ளிட்ட பூக்களை விவசாயிகள் பரமத்தி வேலூரில் நடை பெறும் தினசரி பூ ஏல மார்க்கெட்டிற்கு தினந் தோறும் கொண்டு வருகின் றனர். சென்ற வாரம் நடை பெற்ற ஏலத்தில் குண்டு மல்லி பூ கிலோ ஒன்று ரூ.200–க்கும், சம்பங்கி ரூ.130–க்கும், கோழிகொண்டை ரூ.50–க்கும், செவந்தி ரூ.100–க்கும், ரோஜா கிலோ ஒன்று ரூ.60–க்கும், துளசி கட்டு ஒன்று ரூ.5–க்கும் ஏலம் போனது.

விலை உயர்வு

நேற்று காலையில் நடைபெற்ற ஏலத்தில் குண்டு மல்லி பூ கிலோ ஒன்று ரூ.240–க்கும், சம்பங்கி ரூ.250–க்கும், கோழிகொண்டை ரூ.80–க்கும், செவந்தி ரூ.150–க்கும், ரோஜா கிலோ ஒன்று ரூ.90–க்கும், துளசி கட்டு ஒன்று ரூ.10–க்கும் ஏலம் போனது.பூக்கள் சீசன் தொடங்கி குறைந்த அளவே மார்க்கெட்டிற்கு வருவ தால் பூக்கள் விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## நடப்பு வேளாண் பருவத்தில் உருளைக்கிழங்கு உற்பத்தி 7% அதிகரிக்கும்

புதுடெல்லி

நடப்பு வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) உருளைக்கிழங்கு உற்பத்தி சென்ற பருவத்தை காட்டிலும் 7 சதவீதம் அதிகரித்து 4.25 கோடி டன்னாக உயரும் என விவசாய துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. சென்ற பருவத்தில் உற்பத்தி 4.15 கோடி டன்னாக இருந்தது.

உத்தரபிரதேசத்தில் கடந்த பருவத்தில் 1.41 கோடி டன் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது. இது, நடப்பு பருவத்தில் 1.47 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மேற்கு வங்காளத்தில் 97 லட்சம் டன்னும், பீகாரில் 63 லட்சம் டன்னும், குஜராத்தில் 24 லட்சம் டன்னும், பஞ்சாபில் 21 லட்சம் டன்னும் உற்பத்தி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மத்தியபிரதேசம் மற்றும் பீகாரில் உற்பத்தி அதிகரிக்கும் என்பதால் ஒட்டுமொத்த அளவில் உருளைக்கிழங்கு உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.